

திருவாசகம் - 21
கோவில் மூத்த திருப்பதிகம் கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# கோவில் மூத்த திருப்பதிகம் கதை வடிவில்
# அனாதியாகிய சற்காவியம்
# தில்லயைில் அருளியது

**உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள்**

**நீயிருத்தி அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால்**

**அடியேன்உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரி யாய்**

**பொன்னம்பலத்தெம் முடியா முதலே என்கருத்து முடியும்**

**வண்ணம் முன்னின்றே. 01**

கவிதா மிகுந்த மகிழ்வுடன் காலையில் சிவபூசை செய்து கொண்டிருந்தாள். வெகுநேரமாகச் செய்து கொண்டிருந்தாள். அவளோடு சேர்ந்து சிவபூசை செய்த கதிரேசன் சிவபூசையை முடித்துவிட்டு வந்து காலை உணவை முடித்துவிட்டார். அன்று சனிக்கிழமை பல்கலைக்கழகம் இல்லாததால்தான் நீண்ட நேரமாகச் சிவபூசை செய்கிறாள் என்று நினைத்தார். அவர் ஆச்சிரமத்திற்குப் புறப்பட்டபோது அவள் சிவபூசையை முடித்துவிட்டு வெளியே வந்தாள். அவளது மனம் என்றுமில்லாதவாறு மகிழ்வுடன் இருந்தது அவளது முகத்தில் தெரிந்தது. “நானும் ஆச்சிரமத்திற்கு வருகிறேன். தாத்தா, இன்று முழுவதும் நான் சிவனோடு இருக்க விரும்புகிறேன்” என்றாள் கவிதா.

“சரி, வாம்மா” என்றார் கதிரேசன்.

“தாத்தா, இன்று நான் என்றுமில்லாத மகிழ்வுடன் இருக்கிறேன். அதைப்பற்றி நீங்கள் கேட்கவில்லை” என்றாள் கவிதா.

சிரித்தார் கதிரேசன். “எதையென்றாலும் என்னிடம் நீ மறைக்கமாட்டாய். அதனால் சொல்வாய் என்று காத்திருக்கிறேன்” என்றார் கதிரேசன்.

“தாத்தா, மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் சொன்னதெல்லாம் மக்களின் நலன்களில் சிவபெருமான் கொண்டுள்ள அக்கறை என்பீர்கள். அது உண்மை என்று தெரிந்து கொண்டேன். சிவன் அம்மையைத் தன் நடுவில் இருத்தி தானும் இருந்து கொண்டு அடியார்களையும் இருத்தி வைத்திருப்பதால் மெய்யடியார்களுக்கு வரும் துன்பங்களையெல்லாம் நீக்குவான் என்பீர்கள். இறைவனும் இறைவியும் ஒன்று. நான் சிவசக்தியால் ஆக்கப்பெற்றவன். ஆதலால் நானும் சிவசக்தியும் ஒன்று. இனி நானும் உன் அன்பர்களாகிய அடியார்களும் ஒன்றாகும்படி அருள் செய்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதாகச் சொல்வீர்கள். இறைவன் மெய்யடியார்களைச் சிவசக்தியாக நினைத்துத் தனக்குள் வைத்திருக்கிறான். இவ்வளவு நாட்களும் நான் எம் உள்ளத்தில் அவன் இருக்கிறான் என்றுதான் நினைத்தேன். இப்போ நாமும் அவனின் உள்ளத்தின் நடுவே இருக்கிறோம் என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. அதனால்தான் எனக்குத் துரோகம் செய்த மணிவண்ணனை வாகனத்தை ஏற்றிக் கொன்றான். அதனால் நான் மிக்க மகிழ்வுடன் இருக்கிறேன். அவனால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர். அவர்கள் செய்த சிவபூசை வீணாகவில்லை. அவன் தன்னால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பயமுறுத்திப் பணம் பெறுவான். அதனால் அவர்கள் பெருந் துன்பப்பட்டனர். அத்துன்பம் நீங்கிவிட்டது” என்றாள் கவிதா.

“தீயவர்கள் கடவுளைவிடத் தாம் தாம் வல்லவர்கள் என்று நினைத்துச் செயற்பட்டால், அவர்களே தம்மை அழித்துக் கொள்வர். காலையில் நீ சிவபூசை செய்யும்போது உனது தந்தை வந்து அதைச் சொன்னவர். கண் முன்னே தீமை செய்பவர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டாலும் அதை யாரும் உணர்வதில்லை. உணர்ந்தால் வாழ்வு சொர்க்கமாகும்” என்றார் கதிரேசன்.

**முன்னின் றாண்டாய் எனை முன்னம் யானும் அதுவே**

**முயல்வுற்றுப் பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்**

**டொழிந்தேன் பெம்மானே என்னின் றருளி வரநின்று போந்தி**

**டென்னா விடில் அடியார் உன்னின் றிவனார் என்னாரோ**

**பொன்னம் பலக்கூத் துகந்தானே. 02**

“கவிதா முன்பு என்னை ஆட்கொண்ட சிவன், இப்போ எனது சிரத்தைக் குறைவால் என்னைப் புறக்கணித்துவிடாதே. நீ புறக்கணித்தால் உனது பக்தர்களுக்கு

நான் வேற்றான் ஆகி விடுவேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அவரின் சிவபக்தி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு சென்ற நிலையில் இப்படி ஏன் சொல்கிறார் என்று தெரியுமா.? ஒரு தாயின்மீது பிள்ளை அளவுக்கதிகமான பாசத்தை வைத்திருக்கிறது. அது அன்பு மேலீட்டால் அம்மா கூடாது. எனக்கு அம்மா மீது அன்பில்லை என்று சொல்வது போன்றதுதான் இது. ஒரு பக்தன் எப்போதும் குறைவில்லாத பக்தியைச் சிவன்மீது வைக்க வேண்டும். வைத்துவிட்டுத்தான் வைத்த பக்தி மிக மிகக் குறைவானது என்று நினைக்கும்போது முயற்சித்துத் தேட வேண்டும் என்றநிலை உருவாகும். ஆரம்பத்தில் என்னிடம் பொருள் இல்லை. ஒரு ஏழை விவசாயியாகவே வாழ்ந்து வந்தேன். ஒரு வருடம் சிவனின் அருளால் நெல் அமோகமாக விளைந்தது. அதைப் பார்த்ததும் இதைப்போல வருடாவருடம் விழைய வேண்டுமென்று நினைத்து உழைத்தமையால்தான் நான் பெரும்பொருளைத் தேட முடிந்தது. அப்படி நினைக்காதிருந்தால் இந்த நிலையை அடைந்திருக்க முடியாது. துன்பங்களை நீக்குவது முயற்சி. அந்த முயற்சி குறைவானது என்று நினைப்பவர்கள் தான் வாழ்க்கையில் அடிக்கடி வெற்றியடைகிறார்கள். அதனால் தான் நான் நீ அதிகளவு புள்ளிகளைப் பெற்றபோதும் பாராட்டாமல் இன்னும் புள்ளிகளைப் பெறவேண்டும் என்று சொல்வேன். போதும் என்று நினைத்தால் ஆர்வம் குறைந்துவிடும். ஆர்வக் குறைவு தோல்வியை உண்டாக்கும். அதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் வலியுறுத்துகிறார்" என்றார் கதிரேசன்.

**உகந்தானே அன்புடை அடிமைக் குருகாவுள்ளத்**

**துணிர்விலியேன் சகந்தான் அறிய முறையிட்டால் தக்கவாறன்**

**றென்னாரோ மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தாய்**

**அடியேற்குன் முகந்தான் தாரா விடின்முடிவேன் பொன்னம்**

**பலதெம் முழுமுதலே. 03**

"வேதம், பூசை, ஆராதனை, அபிஷேகம், திருவிழாக்கள் செய்தல் போன்ற சிவச்செயல்கள் ஒருவனின் மனத்தை மகிழ்ச்சிப்படுத்துமேயன்றி இறைவனைக் காண வழியமைக்காது. இவையாவும் பயன் கருதிச் செய்பவை. ஆடம்பரத்திற்காகச் செய்பவை. தனது தகுதியை வெளிப்படுத்தச் செய்பவை. இவற்றால் பயன் வருமென்று நினைப்பது தவறு. உள்ளத்தில் இருக்கும் சிவனை உள்ளத்தால் ஆராதித்தல் வேண்டும். சுத்தமான மனத்தில்தான் சிவன் மகிழ்வுடன் இருப்பான் அது போலச் சுத்தமான மனமுடையவர்கள்தான் இறைவனின் மனதில் இருப்பார்கள். மாணிக்கவாசக

சுவாமிகள் சொல்கிறார்; “பெரும் வேள்விகள், பூசைகள், புனருத்தாரணங்களைச் செய்பவர்களைத் தான் நீ ஆட்கொள்பவனாக இருந்தால் என்றும் உன்னை நினைத்திருக்கும் என்னை ஆட்கொண்டிருக்கமாட்டாய். என்னை நீ ஆட்கொள்ளாவிட்டால் பக்திமார்க்கம் சரியில்லையென்று உலகத்தவர் குறைகூறுவர். நானும் பொருளின்மையால் சாகவேண்டியநிலை உருவாகும். அத்தகைய குறைபாடுகளுக்கு நீ இடங்கொடுக்கலாகாது” என்று மாணிக்கவாசகர் சிவனுக்கு அறிவுரை கூறுகிறார். வருடாவருடம் சிவன்கோவிலில் திருவிழாக்களைச் செய்வோர் அதைப் போட்டி நிகழ்வாகக் கருதியே செய்கின்றனர். ஒருவரை ஒருவர் வெல்ல வேண்டும் என்ற நினைப்புத் திருவிழாச் செய்யும் அனைவரினதும் மனதில் வேரூன்றி உள்ளது. இந்த நிலையில் பக்தி எப்படி வரும். அத்துடன் பொருளில்லாதவன் எப்படி விழாக்களைச் செய்ய முடியும், ஓர் அபிஷேகம் செய்ய பத்தாயிரம் ரூபாவிலிருந்து பல இலட்ச ரூபாவைப் பலர் செலவு செய்கின்றனர். அதைச் செய்ய முடியாத ஏழைகள் மனம் வருந்தக்கூடாது என்று சைவசமயம் நினைக்கிறது. சிவனும் அதைத்தான் சொல்கிறார். அதையாரும் புரிந்து கொள்வதில்லை. நான் கோவிலில் பெரிதாகத் திருவிழாச் செய்யாமைக்கு இது தான் காரணம். அதனால்தான் என்னால் சிவனடியார்க்கு உதவ முடிகிறது. ஓர் ஏழைக்கிடும் உணவு சிவனின் வயிற்றைச் சென்றடைவதாக வேதங்கள் கூறுகின்றன. அதை யார் நம்புகிறார்கள்.? அதனால் தான் அவர்கள் போட்டி போட்டு எதையும் சாதிக்கலாம் என்று நினைக்கின்றனர். இவையாவும் எம்மோடு கூட வரா. திருவிழா முடிவடைந்ததும் அதற்குச் செய்த அலங்காரங்கள் அற்றுப்போவது போலவும், காட்சிகள் மறைவது போலவும், செலவு செய்த பணமும், முயற்சியும் பயனற்றுப் போகின்றன” என்றார் கதிரேசன்.

**மும்முத லேஜம் புலனுக்கும் பூவர்க்கும் என்தனக்கும்**

**வழிமுதலேநின் பழவடி யார் திரள்வான் குழுமிக்**

**கெழுமுத லேயருள் தந்தி ருக்கஇரங்குங்கொல்லோ என்று**

**அழுமதுவேயன் றிமந்றென் செய்கேன் பொன்னம்**

**பலத்தரைசே. 04**

“கவிதா, இறைவனிடம் நாம் எதையும் முறையிடலாம். எதை நினைத்துக் கொண்டு வணங்கினாலும் அதை உணரும் திறன் சிவனுக்குண்டு. மாறாத பக்தியுள்ளவன், இறைவனை உள்ளபடி உணர்வான். காண்பான். இது பக்தரல்லாவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும். மற்றவர்களின் நலனை விரும்பிப்

பிரார்த்திப்பவனின் பிரார்த்தனையைச் சிவன் ஏற்றுக் கொள்வான். உன்னைப் பற்றித் தானம்மா எனது எண்ணம் சிந்தனையெல்லாம் அமைந்துள்ளன. உனக்கொரு நல்வாழ்வைக் கொடு என்றுதான் நான் சிவனைப் பிரார்த்திக்கின்றேன். அது பலித்து விட்டது" என்று கூறி நிறுத்தினார் கதிரேசன்.

கவிதா அவரின் பேச்சைக் கேட்டுக் குழம்பிப் போனாள். அவளால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. அனைத்திற்கும் ஆதிமூலமானவன் சிவன். அவன்தான் எதையும் இயக்குபவன். சாரதியின் விருப்புக்கேற்பச் செயற்படும் வாகனத்தைப் போலத் தாம் நாம் இருக்கிறோம். சாரதி ஒரு குறித்த இலக்கை நோக்கிச் செல்லும்போது வழியில் மனதில் மாற்றமேற்பட்டால் அவன் முன் நினைத்த இலக்கு மாறும். ஏனென்றால் இயக்குபவன் அவன். அதுபோலத்தான் வாழ்வும். நினைத்தது நடக்காது. நினைக்காதது நடக்கும். திட்டங்கள் போடலாம். அதை நிறைவேற்றுவது அவனது கையில் தான் உண்டு. மாணிக்கவாசகர் கூறுவதுபோல, "சிவனே, உன்னை நாடி வருவதைத் தவிர வேறு எதையும் என்னால் அல்ல எவராலும் செய்ய முடியாது" என்று நினைத்தாள்.

"கவிதா, உன்னோடு பல்கலைக்கழகத்தில் கற்கும் மகேசன் எனது இரத்த உறவினனின் மகன். தகப்பன் என்னிடம் வந்து உன்னைத் தனது மகன் விரும்புவதாகவும் அதனால் உன்னைத் தனது மகனுக்குத் திருமணம் செய்து தருமாறும் கேட்டார். நான் எதுவும் கூறவில்லை. உன்னுடன் கதைத்துவிட்டுக் கூறுகிறேன் என்றேன். நீ திருமணம் செய்வதில்லை என்று சிவனின்மீது சத்தியம் செய்துள்ளாய். சிவன் அடியவர்க்கு எளியவன். சத்தியத்தை மறந்தாலும் மன்னிப்பான். அதைவிட எமது நிலையை விளக்கிச் சொல்லலாம். சொல்லாவிட்டாலும் புரிந்து கொள்வான். எம்மால் என்ன செய்ய முடியும். அவன் தீர்மானிப்பதை ஏற்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை" என்றார் கதிரேசன்.

**அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே என்றுன்**

**அருள்நோக்கி இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற்றிருந்தே**

**வேசற்றேன் கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன்**

**அடியேன்பால் பிரைசேர் பாலின் நெய்போலப் பேசா திருந்தால்**

**ஏசாரோ. 05**

கவிதா, அதை எதிர்பார்க்கவில்லை. மகேசன் பல்கலைக்கழகத்தில் ஏதாவது காரணத்தை உருவாக்கிக்கொண்டு வந்து கதைப்பான். அது அவளுக்குப் பிடிக்காது. அதனால் அவள் சொன்னாள்; "மகேஸ், நான் திருமணம் செய்யாது சிவசேவை செய்ய விரும்புகிறேன். எந்தக் காரணங்கொண்டும் எந்த ஆளையும் நான் விரும்பமாட்டேன். தயவுசெய்து எனது மனதைக் குழப்பாதீர்கள்" என்று அவள் சொன்னபோது அவன் சொன்னான், "நானும் சிவபக்தன். எனது குடும்பத்தினரும் சிவபக்தர்கள். சிவபக்தர்கள் திருமணம் செய்யக்கூடாது என்றில்லை. கதிரேசன் தாத்தா எனது இரத்த உறவினர். அவர் மனைவி, பிள்ளைகளுடன் சேர்ந்து சிவசேவை செய்கிறார்" என்றபோது அவள் சொன்னாள்; "அது அவரவரது மனதைப் பொறுத்தது. என்னைத் தயவுசெய்து தொந்தரவு செய்யாதீர்கள்" என்றவள். இப்போ அந்தப் பிரச்சினை திசைமாறி வந்துள்ளது. என்ன செய்வது?" என்று யோசித்தாள் கவிதா.

"கவிதா, இரைதேடும் கொக்கை ஒத்ததுதான் வாழ்க்கை. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "அல்லும் பகலும் அருள்த்தாகம் கொண்டு வாடி இருக்கிறேன். வீடுபேறு அடையப்பெற்ற உன்னடியார்கள் இன்பம் துய்க்கின்றனர். பாலில் நெய் இருப்பது போன்று நீ பாராமுகமாக இருந்தால் நான் என்ன செய்வேன். எதற்கு உரியவனாவேன்" என்று கேட்கிறார். வீடு பேறு அடைவதென்றவுடன் யாரும் காணாத சொர்க்கத்தில் வாழ்வது என்று தான் பலரும் கருதுகின்றனர். வீடு என்றால் நாம் வசிக்கும் இல்லம்தான். அங்குதான் சொர்க்கமும் நரகமும் உண்டு. ஒருவன் செய்யும் செயல்கள் தான் சொர்க்கத்தையும், நரகத்தையும் எமக்குத் தருகின்றன. இது உனக்குத் தெரியும். எல்லாக் கோள்களையும், அவற்றில் உள்ளவற்றையும் இயக்குபவன் சிவன். அவனது எண்ணப்படி தான் யாவும் நடக்கும். தனது அடியவளான உனக்கு நல்வாழ்வை அமைத்துத் தரவேண்டுமென்று அவன் நினைத்துச் செயற்படுகிறான். அப்படிச் செயற்படாவிட்டால் அவன் சிவனல்ல. நான் மகேசனுக்கு உனது வரலாறு முழுவதையும் சொல்லிவிட்டேன். அவன் முழுமனதோடு சம்மதித்து விட்டான். கணவனை இழந்த ஒரு பெண்ணோ, அல்லது நம்பியவனால் கைவிடப்பட்ட பெண்ணோ யாராக இருந்தாலும் சரி மகிழ்வுடன் தன்னைத் தொழவேண்டும் என்றுதான் சிவன் விரும்புவான். அதனால் உனது எண்ணத்தை மாற்று" என்றார் கதிரேசன். கவிதாவுக்கு இன்னும் அதிர்ச்சி நீங்கவில்லை.

**ஏசா நிற்பர் என்னைஉனக் கடியா னென்று பிறரெல்லாம்**

**பேசா நிற்பர் யான்தானும் பேணா நிற்பேன் நின்னருளே**

**தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க**

**ஈசாபொன்னம் பலத்தாடும் எந்தாய் இனித்தான்**

**இரங்காயே. 06**

“கவிதா, ஊர் உலகத்தைப்பற்றி ஒரு சிறிதும் எண்ணாதே. தீயவர்கள் என்று மக்களால் ஒரு காலத்தில் தூற்றப்பட்டவர்கள் இன்னொரு காலத்தில் போற்றப்படுவர். எமது கிராமத்தில் வாழ்ந்துவரும் நாகராசா என்பவன் அஞ்சாது பாவங்களைச் செய்பவன். அவனது மனைவி அவனுக்கு உறுதுணையாக இருந்து செயற்படுபவள். அவர்களைத் தூற்றாதவர்கள் யாரும் இல்லை. அவனது ஒரு மகன் வெளிநாட்டிற்குச் சென்றான். அதன் பின் அவன் தன் சகோதரர்கள் ஐவரையும் தான் வசித்த நாட்டிற்கு அழைத்து விட்டான். இப்போ அவர்கள் பெரும் கோடீஸ்வரர்கள். நாகராசாதான் இப்போ ஊர்ப்பெரியவன். அவனைத் தூற்றித்திரிந்த அவனது மனைவியின் சகோதரன் சுந்தரன் இப்போ நாகராசாவின் புகழைப் பரப்பித் திரிகிறான். இது மாணிக்கவாசக சுவாமிகள் காலத்திலும் நடைபெற்றது. அவர் சொல்கிறார்; “சிலர் என்னைத் தூற்றுவர், வேறு சிலர் நான் உனது பக்தன் என்று நினைத்துப் போற்றுவர். ஆனால் நான் இரண்டையும் பொருட்படுத்தாது உனது அருளையே நாடி இருக்கிறேன். ஈசனே, உனது அன்பர் சூழ்ந்த உனது திருச்சபையை எனக்குக் காட்டியருள்க” என்கிறார். யார் எதைச் சொன்னாலும் கவலை கொள்ளாது தனது காரியத்தைத் திறம்படச் செய்பவன்தான் வெற்றியடைந்த மனிதன். மகேசன் சிவபக்தன். உனது சிவசேவைதான் அவனை உன்மீது காதல் கொள்ள வைத்தது. அவன் சொன்னான்; “படுபாதகர்களே சிவனால் மன்னித்து ஏற்கப்பட்டவர்கள் யார் ஒருவர் சிவனை மனப்பூர்வமாக வணங்குகிறார்களோ அவர்கள் புனிதர்கள். நான் கவிதாவை விரும்புகிறேன். எனக்குத் தெரிந்தகதை ஊராருக்குத் தெரிந்தாலும் கவலைப்பட மாட்டேன். ஏனென்றால் உலகம் அப்படியானது. நாகராசாவும் அவனது மனைவியும் தெரிந்து கொண்டுதான் தீயசெயல்களைச் செய்தனர். அதை ஊரார் தூற்றினர். அவனுக்குப் பணம் வந்தது. சிவனை வணங்க ஆரம்பித்ததும் அவன் செய்த பழிபாவங்கள் யாவும் நீங்க அவனை ஊரார் புகழ்கின்றனர். இது தான் உலகம் என்றவன்” என்றார் கதிரேசன்.

**இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென்**

**றேமாந்திருப்பேனை அருங்கற் பனைகற் பித்தாண்டாய்**

**ஆள்வா ரிலிமா டாவேனோ நெருங்கும் அடியார் களும்நீயும்**

**நின்று நிலாவி விளையாடும் மருங்கே சார்ந்து வரளங்கள்**

**வாழ்வே வாவென்றருளுவாயே. 07**

கவிதாவால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. விம்மி விம்மி அழுதாள். அதைக்கண்ட கதிரேசன் சொன்னார்; "கவிதா உணர்ச்சிகளின் வெளிப்பாடுதான் அழுகை. சிவனை நினைவில் வைத்துக்கொண்டு அழு. அவர் உன்னை நல்ல முடிவெடுக்க வைப்பார்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

"சிவனே, என்று கண்களை மூடினாள் கவிதா. அவளது மனம் என்றுமில்லாதவாறு போராடியது. துன்பப்படும் மனதைத் திடப்படுத்தும் அம்பலக்கூத்தா, மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதுபோல இரங்கி ஆட்கொள்ள வேண்டும் என்று வணங்கிய என்னைப் புதியமுறையில் செல்ல வைத்தாய். அது ஒரு கற்பிதமாகப் போய்விட்டது. ஏனென்றால் ஆதரிப்பார் யாரும் இல்லாத மாடுபோல நான் தவிக்கிறேன். வாழ்வைத் தருபவனே அடியாரும் நீயும் நெருங்கி நின்று வணங்குமிடத்திற்கு என்னை அழைத்துச் செல்லமாட்டாயா?" என்று இரக்கிறார். அந்த நிலையில்தான் நானும் இருந்தேன். ஆதரிப்பார் இல்லாத மாடு என்று என்னை நான் நினைத்திருந்தபோது ஒரு பெரும் அடியாரையும், அடியார் கூட்டத்தையும் உன்னையும் எனக்குத் தந்தாய். வாழ்வின் வித்து நீ. நீ அதை எப்படி அமைக்கிறாய் என்று உனக்குத்தான் தெரியும். மகேசன் வந்து என்னுடன் கதைத்தபோது நான் ஆண்கள் மீதிருந்த வெறுப்புணர்வால் ஆராயாது பலவற்றைக் கதைத்துவிட்டேன். நல்லவர்களையும் தீயவர்களையும் நீதானே படைக்கிறாய். பின் திருத்துகிறாய். அடியார்களும் நீயும் கூடியிருக்கும் இடத்திற்கு என்னை அழைத்து வந்துவிட்டாய். அது உனது பெருங்கருணை. அப்படி நீ அழைத்து வராவிட்டால் என்னை எரித்த இடத்தில் புல் முளைத்திருக்கும். எல்லாம் உன் கருணை. எல்லாம் உன் செயல். எனது விருப்பப்படி எது நடக்கிறது.? உனது எண்ணம் எதுவோ அதுவே நடக்கட்டும். அதற்குமேல் நான் எதையும் கூறமாட்டேன். உனது திருவிளையாடலை நீயே அறிவாய். அதனால் உனது விருப்பப்படி செய். அதனால் உனது பக்தையான எனக்கு தீங்கைமட்டும் செய்யாதே. மீண்டும் சொல்கிறேன் ஆதரவில்லாத மாடு நான். என்னைக் காப்பாற்று" என்றாள் கவிதா.

**அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சல் என்பார் ஆர்இங்குப்**

**பொருளா என்னைக் புகுந்தாண்ட பொன்னே**

**பொன்னம்பலக்கூத்தா மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து**

**வருந்துவேனை வாவென்றுன் தெருளார் கூட்டங் காட்டாயேல்**

**செத்தே போனாற் சிரியாரோ.** **08**

கவிதா கதிரேசனின் வீட்டில் இருந்த சிவலிங்கத்திற்கு முன்னால் வந்தமர்ந்து தான் கொண்டுவந்த மாலையைச் சிவலிங்கத்திற்குச் சாத்தினாள். பின் பூக்களைப் பரவவிட்டுச் சிவபுராணத்தை ஓதத் தொடங்கினாள்.

அவளது மன இறுக்கம் தளர்ந்து கொண்டிருந்தது; "சிவனே, மாணிக்கவாசக சுவாமிகள் சொன்ன பாமாலையான திருவாசகம் மனிதனின் எல்லாவகையான மனவெழுச்சிகளையும் நீக்கும் வழிவகைகளைக் கூறுகிறது. அவர் ஒரு பெரும் ஞானி என்பதால் எல்லாவற்றையும் உணர்ந்து அவற்றைத் தன்மேல் ஏற்றிச் செல்கிறார். இதைப் புரிந்து கொள்பவர்கள் தான் வாழ்க்கையை மகிழ்வாகக் கழிப்பார்கள்" என்றாள். மனம் பஞ்சாகிக் காற்றில் பறந்தது.

**சிரிப்பார் களிப்பார் திரண்டுதிரண்டுன்**

**திருவார்த்தை விரப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே**

**றிருந்துன் திருநாமம் தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா**

**என்பார் அவர்முன்னே தரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி**

**இனித்தான் நல்காயே.** **09**

"சிவனே, உன் மீதுள்ள பக்தியின் மேலீட்டால் உன் அன்பர்கள் உலகையும் தன்னையும் மறந்து சிரிப்பார்கள். மகிழவும், தியானிக்கவும் அவர்களுக்கு உன்னைத்தவிர இவ் உலகில் யார் உள்ளனர்.? அத்துடன் உனது மகிமைகளைப் பற்றிப் பேசவும், அவற்றைக் கேட்டு மகிழவும், பாராட்டவும் உன்னைச் செந்தமிழ் மந்திரமான ஐந்தெழுத்தைச் சொல்லி ஆராதிக்கவும், போற்றவும் பலர் இருக்கின்றனர். அவர்களுள் நான் வழிபடத் தெரியாதவன் என இகழ்வது முறையோ.? மன்னனே, என்னையும் ஆட்கொள்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைக் கெஞ்சுகிறார். அவரின் நினைவில்தான் நானும் உள்ளேன். எத்தனையோ மெய்யடியார்கள்

மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதுபோல சிரித்து, மகிழ்ந்து, தியானித்து, உன் மகிமையைப் பேசி, அவற்றைப் பாராட்டி, வாழ்த்தி வணங்குகிறார்கள். நான் காலையில் உன்னிடம் வந்து வணங்கி எனது மனதில் உள்ள துன்பங்களை மட்டுமே கூறுகிறேன். அதனால் எனக்கு நீ உதவுவாயா? உன்மீது பெரும் பக்தி கொள்ளாத அபலை நான். சிறுவயதில் வறுமை, அறியாப் பருவத்தில் காதல் என்று துன்பப்பட்டு விட்டேன். அதைத்தானே திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். அதனால் உதவாமல் விட்டுவிடாதே. நான் மகேசனைத் திருமணம் செய்வதா விடுவதா என்று நீயே கூறு. எந்தவகையில் யார் மூலமாவது கூறினால் சரி. என்னால் இப்பிறவியில் முடிவெடுக்க முடியாது" என்று அழுதாள் கவிதா.

**நல்கா தொழியான் நமக்கென்றும் நாமம் பிதற்றி நயனனீர்**

**மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தால்**

**நினைந்துருகிப் பல்காலுன்னப் பாவித்துப் பரவிப் பொன்னம்**

**பலமென்றே ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய் என்னை**

**உடையானே. 10**

அழுத அவள், "சிவனே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதுபோல" உடையவனாகிய நீ என்னைப் புறக்கணிக்கக் கூடாதென்பதற்காக உனது பெயரைச் சொல்லியும், கண்ணீர்விட்டு அழுதும், உன்னை வாழ்த்தியும், நாக்குழறியும், வணங்கியும், மனனம் பண்ணியும், உருகியும், திரும்பத் திரும்பத் தியானித்தும், துதி செய்தும் தளர்ந்து நிற்கிறேன். என்னை இரங்கி ஆண்டருள்வாயாக" என்று அழுதாள் கவிதா. அவளால் முடிவு எடுக்க முடியவில்லை. அப்போது கதிரேசன், "கவிதா" என்று அழைத்தார். அவள் எழுந்து வெளியே வந்தாள்.

அம்மா ஒருநாளும் நான் பகலில் நித்திரை கொள்ளவில்லை. சற்றுமுன் சாய்வு நாற்காலியில் இருந்தபோது கண்ணயர்ந்து விட்டேன். அப்போது சிவன் எனது கனவில் தோன்றி; "கதிரேசு, ஏன் யோசிக்கிறாய். கவிதாவுக்கும் மகேசனுக்கும் திருமணத்தை உடனே முடித்து வை" என்றார். "உனது விருப்பத்தை சொல்" என்றார்.

"ஐயா, எனக்கென்று எந்த விருப்பமும் இல்லை. சிவனும் நீங்களும் தீர்மானிப்பதை என்னால் ஏற்காது விட முடியுமா?" என்றாள். கதிரேசன் பூரித்துப் போனார். "சரியம்மா, நான் ஆவன செய்கிறேன்" என்றார்.

கவிதா மகேசனை நினைத்துக் கண்களை மூடினாள். மகேசன் சிவனுருவில் தோன்றி, "நான் இருக்கிறேன், பயம் கொள்ளாதே" என்றான். திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள் கவிதா. கதிரேசன் சிரித்துக்கொண்டு அவளின் முன்னால் நின்றார்.

திருச்சிற்றம்பலம்